31st March 1964]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government addressed the University Grants Commission for details about the Commission's pattern of assistance for the establishment of new Universities and the quantum of aid that could be expected for the proposed University at Madurai.

(*b*) A final decision will be taken after the report of the Expert Committee constituted by the Government is received.

Appointment of Tamil graduates as Pandits

* 487 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the graduates who took Tamil as their Optional subject in their Degree course are appointed as Tamil Pandits in the High Schools; and

(*b*) whether they are treated on a par with other Graduates in regard to salary, service conditions and hours of work?

THE HON. SRI M. BHAKTAVATVALAM : (*a*) Yes, provided that they have secured a degree in teaching and are appointed to Grade I posts.

(*b*) Yes.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியில் இத்தகைய தமிழாசிரியர்களுக்குத் தலைமை ஆசிரியர்கள் பதவி கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கிரேடு-1 பதவி என்றால் அது தான் தலைமை ஆசிரியர் பதவி.

புதிய உயர்நிலைப் பள்ளிகள்

* 488 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : }
திரு. எம். வி. கரிவேங்கடம் : } கனம் முதல் அமைச்சர்

தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ல் தமிழ்நாட்டில் எத்தனை புதிய உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : One hundred and ninety new High schools were permitted during 1963–64.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே நடப்பு ஆண்டில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் திறக்க உத்தேசம் இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வருகிற மனுக்கள், எந்த எந்த இடங்களில் அமைக்கப்படவேண்டும் என்கிற நிலை, இவற்றை யெல்லாம் பொறுத்த விஷயம் இது.

திரு. கரு. சீமைச்சாமி : புதிதாகத் திறக்கப்படுகிற உயர்நிலைப் பள்ளிகளுக்கு விளையாட்டு மைதானங்கள் இல்லை. பள்ளிகளைத் திறக்கவேண்டும் என்ற ஆர்வத்தினாலே அவ்வாறு திறக்கப்